# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 107/2014

**10.06.2025. Accused 1 to 3 present.**

**அ.சா.23 சின்னராஜ் த.பெ. ராமன்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தபின்னர் 26.04.2013 ம் தேதி காலையில் வழக்கு கோப்பை என்னிடம் ஒப்படைத்தார். 26.04.2013 அன்று அதிகாலையிலேயே நான் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டேன் . நான் வந்த நேரத்தை காவல் நிலையத்தில் பாராமரிக்கப்படும் பொது நாட்குறிப்பில் குறித்து வைத்தேன் . இந்த வழக்கின் விசாரணையை எடுத்துக்கொண்ட நேரமும் பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளேன். நான் குறிப்பிட்ட நேரம் என்ன என்று கேட்டால் பொது நாட்குறிப்பை பார்த்தால்தான் சொல்ல முடியும் . நான் முதல் விசாரணையில் 26.04.2013 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் , அந்த நேரத்தில் வழக்கு கோப்பு என் பார்வைக்கு வைக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல . நான் சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயாரிக்கப்படவில்லை என்றும் அவை காவல் நியைத்தில் வைத்து தயாரித்தேன் என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் சாட்சிகளான பாண்டியன் , ஆறுமுகம் மகன் வேலு ஆகியோர் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் அல்ல என்று சொன்னால் சரிதான். நான் காலை 6 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றபோது சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்று சொன்னால் தவறு. சம்பவ இடத்தில் நான் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தபோது அங்கு எந்த கண்ணுற்ற சாட்சிகள் அங்கு இருந்தார்கள் என்று கேட்டால் பாலு , பச்சையம்மாள் , சரளா, குணசேகரன் , கெங்கா, வேலு த.பெ. அம்மாவாசை ஆகியோர் இருந்தார்கள். நான் பார்வை மகசர் தயார் செய்த சமயத்தில் மேற்படி சாட்சிகள் அங்கு இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் பாலு, பச்சையம்மாள் , சரளா, குணசேகரன் , கெங்கா, வேலு த .பெ. அம்மாவாசை ஆகியோர் வழக்கு சம்மந்தமாக என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள். அவர்களது வாக்குமூலத்தில் நான் சம்பவ இடத்தில் பார்வை மகசர் மற்றும் வரைபடமும் தயார் செய்தது பற்றி

சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை யார் அடையாளம் காண்பித்தது என்று எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் விசாரித்த சாட்சிகள் சம்பவ இடத்தை சொன்னார்கள் . முதல் தகவலில் குறிப்பிட்டுள்ள தகவலின் அடிப்படையில் அந்த இடம் சம்மந்தமாக நான் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்று சொன்னால் சரிதான் . பார்வை மகசர் மற்றும் வரைபடம் நான் தயாரிக்கவில்லை என்று சொன்னால் நான் சொல்ல சொல்ல உதவி ஆய்வாளர் எழுதினார் . அவர் எழுதினார் என்று எந்த குறிப்பும் இல்லை . நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் மகசரில் ரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரை மற்றும் ரத்தக்கரை படியாத சிமெண்ட் காரை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல . நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள வீராசாமி என்பவரின் வீட்டின் சுவற்றிலோ அல்லது தரையிலோ ரத்தக்கரை இருந்தது என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான் . நான் வழக்கிற்காக ரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரை மற்றும் ரத்தக்கரை படியாத சிமெண்ட் காரை ஆகியவற்றை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் தயார் செய்த பார்வை மகசரில் ரத்தக்கரை படிந்த காரை இருந்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வதுபோல் வேடியப்பன் கோயில் அருகே 1வது எதிரி சுந்தரமூர்த்தி என்பவரை கைது செய்தேன் என்றும் , அப்போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல . நான் சொல்வதுபோல் 1ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் சாட்சிகள் செல்லபாண்டியன் , கோவிந்தராஜ் ஆகியோர் முன்னி்லையில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல .. இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கத்தியை எடுத்து ஒப்படைப்பதாக முதல் எதிரி என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி எந்த அரைக்கால் சட்டையும் என்னிடம் ஆஜர்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல . எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சட்டை ஆகியவற்றை கைப்பற்றிய மகசரில் ஒயிட்ணர் பயன்படுத்தி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் . நான் கைப்பற்றியதாக சொல்லும் கத்தி மற்றும் ஆடைகளில் ரத்தக்கரை இருந்ததாக மகசரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் . கத்தியில் கண்ட ரத்தமும் , சட்டையில் இருந்த ரத்தமும் எந்த வகையை சார்ந்தது என்று தெரிந்துகொள்ள குருதிவடிநீரியல் ஆய்வுக்கு அவற்றை அனுப்பவில்லை என்றால் சரியல்ல . கத்தியில் கண்ட ரத்தமும் , சட்டையில் இருந்த ரத்தமும் இறந்த நபரின் ரத்தம்தானா

என்று கண்டறிய குருதிவடிநீரியல் ஆய்வுக்கு அவற்றை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. கத்தி மற்றும்ஆடைகளில் இருந்த ரத்தக்கரைகள் இறந்தநபருக்கோ அல்லது எதிரிக்கோ சம்மந்தப்பட்ட ரத்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல . சந்தேகத்தின்பேரில் உதவி ஆய்வாளர் முதல் எதிரியை தேடிக்கொண்டிருந்தார் என்பதை அறிந்து அவரே காவல் நிலையத்தில் சரணடைந்தார் என்றால் சரியல்ல . அ.சா.1 பாலு சம்பவதினத்தன்று காவல் நிலையத்திற்கு வந்தபோது முதல் எதிரி காவல் நிலையத்தில்தான்இருந்தார் என்று சொன்னால் சரியல்ல . நான் கைப்பற்றியதாக கூறப்படும் கத்தியை பாலுதான் என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல . வழக்கிற்காக புகார், சம்பவ நடந்த மறுநாள் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல . புகார் அ.சா.1 பாலு தன் வீட்டில்இருந்தபோது தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல . புகாரில் 2 மற்றும் 3 எதிரிகளை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான் . எதிரி குடும்பத்திற்கும், இறந்த நபரின் குடும்பத்திற்கும்இடையே நிலம் சம்மந்தமாக தகராறு இருந்தது என்றால் சரிதான் . இறந்த நபருக்கு சம்பவம் நடந்த ஊரிலும் , பல ஊரிலும் எதிரிகள் இருந்தார்கள் என்றால் என்னுடைய விசாரணையில் அதுபோல் எதுவும் தெரியவரவில்லை . இறந்த நபர் அவருடைய நிரந்தர எதிரிகளால் தாக்கப்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல . இறந்த நபரை யார் தாக்கியது என்று தெரியாத நிலையில் சந்தேகத்தின்பேரில் எதிரி மீது நிலத்தகராறு காரணமாக பொய்யாக புகார்அளித்தார்கள் என்றால் சரியல்ல . புகார்தாரர் மற்றும் அவருடைய குடும்ப நபர்களை சரியாக விசாரணை செய்யமல் எதிரிகள் மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல . பாபுவின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல .

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.